பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 04 2024 **MONDAY** 6 30 **PM**

வணக்கம், மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் இரவு 10 மணிக்கு மேல் எந்தவொரு அரசியல் கட்சியினரும் தேர்தல் பிரச்சாரம் செய்யக்கூடாது என்று மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

2. தமிழக பிரச்சாரத்தின் போது மக்கள் அளித்த பேராதரவு மீண்டும் வெற்றி பெற்று மக்கள் நலப் பணிகளை தொடர்வதற்கு ஊக்கமாக அமைந்துள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. காங்கிரஸ் ஆட்சி அமைந்ததும், விவசாய விளைபொருட்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்ய சட்டம் கொண்டு வரப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

4. தேர்தலை ஒட்டி, மக்கள் சொந்த ஊர்களில் வாக்களிக்க ஏதுவாக சென்னை உள்ளிட்ட நகரங்களிலிருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக போக்குவரத்துத்துறை அறிவித்துள்ளது.

5. ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் மோகன்பஹான் அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

**>>>><<<<**

தமிழகம் உட்பட முதல்கட்ட மக்களவை தேர்தல் நடைபெறும் 102 தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த தொகுதிகளில் வரும் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதால், நாளை மறுநாள் மாலையுடன் பிரச்சாரம் நிறைவுபெறுகிறது.

இதையொட்டி, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, கேரள மாநிலம், **Alathur-** தொகுதிக்கு உட்பட்ட **Cheruvattani** என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

தொடர்ந்து, நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் வருகை தந்த பிரதமருக்கு சாலையின் இருபுறமும் திரண்டு நின்று மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர் அகஸ்தியர்பட்டியில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

நாட்டின் பாதுகாப்பு பணிகளில் தமிழகத்திற்கு கணிசமான பங்கு உள்ளதாக பிரதமர் கூறினார்.

குறிப்பாக, வீரபாண்டிய கட்டபொம்மன், வீரமங்கை வேலுநாச்சியார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோர் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றதை அவர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில் தமது பிரச்சாரத்தின் போது மக்கள் அளித்து வரும் பேராதரவு பிஜேபி மீண்டும் வெற்றி பெற்று மக்கள் நலப் பணிகளை தொடர்வதற்கு ஊக்கமாக அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

தமிழகத்தில் காமராஜர் நடத்திய தூய்மையான ஆட்சியை மத்தியில் பிஜேபி நடத்தி வருவதாகவும், ஆனால், திமுகவும், காங்கிரஸும் காமராஜரை தொடர்ந்து அவமதித்து வருவதாகவும் திரு நரேந்திர மோடி விமர்சித்தார்.

வயநாடு தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களிலும் பேரணியாக சென்று வாக்கு சேகரித்தார்.

அப்போது, காங்கிரஸ் ஆட்சி அமைந்ததும், விவசாய விளைபொருட்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்ய சட்டம் கொண்டு வரப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே தலைவர் என்பதை யாரும் ஏற்க மாட்டார்கள் என்று குறிப்பிட்ட திரு. ராகுல் காந்தி, காங்கிரஸின் கருத்தும் அதுதான் என்றார்.

வயநாடு தொகுதியின் பல்வேறு இடங்களில் நாளையும் அவர் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இந்நிலையில், திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் தமது சமூகவலைதளப் பதிவில், ஜிஎஸ்டி என்பது வரி அல்ல வழிப்பறி போன்றதாகும் என குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர், ஆறு மடங்கிற்கும் அதிகமான மறைமுக வரியை செலுத்துவதாக குறிப்பிட்டுள்ள அவர், இதுபோன்ற முறையை மாற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், அஇஅதிமுகவுக்கு கிடைத்துள்ள வரவேற்பை மறைக்கும் வகையில் கருத்து கணிப்பு என்ற பெயரில் கருத்து திணிப்பை மத்திய மாநில அரசுகள் ஊடகங்கள் மூலம் வெளியிட்டு வருவதாக கூறியுள்ளார்.

அஇஅதிமுகவுக்கு கிடைத்து வரும் வரவேற்பை வாக்குகளாக மாற்ற, கட்சியினர் இல்லங்கள் தோறும் சென்று வாக்காளர்களிடம் அஇஅதிமுக ஆட்சியின் போது நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறி, வாக்கு சேகரிக்க வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

கச்சத்தீவு பிரச்சினையில் தேசிய ஜனநாயக கூட்டணி மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் செயல்படும் என த.மா.கா. தலைவர் திரு. ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரத்தில் மீனவ மக்களுக்கு திமுக அநீதி இழைத்துவிட்டதாக குறை கூறினார்.

இதற்கிடையே, சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ, மாநிலத்தில் எந்தவொரு அரசியல் கட்சியினரும், இரவு 10 மணிக்கு மேல் பிரச்சாரம் செய்யக்கூடாது என்று கூறியுள்ளார்.

மேலும், நாளை மறுநாள் மாலை 5 மணிக்கு பதிலாக, ஒரு மணிநேரம் கூடுதலாக மாலை 6 மணி வரை பிரச்சாரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்குப்பதிவுக்கு தேவையான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், வரும் 18ஆம் தேதி மாலைக்குள் மாநிலம் முழுவதும் வாக்குப்பதிவு மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லப்படும் என்றும் திரு. சத்யபிரத சாஹூ கூறினார்.

இந்த தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

குறிப்பாக, முதல்முறை வாக்காளர்களிடையே ஏற்படுத்தப்பட்டு வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

சிவகங்கை மாவட்டம், திருமயத்தில் முதல்முறையாக வாக்களிக்கவுள்ள கல்லூரி மாணவிகள், அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

(சவுண்ட் பைட் - மாணவிகள் 30 செகண்ட்ஸ்)

>>>><<<<

தமிழகத்தில் வரும் 19ஆம் தேதி மக்களவை தேர்தல் நடைபெறுவதை ஒட்டி, சென்னை உள்ளிட்ட நகரங்களிலிருந்து, சொந்த ஊர்களுக்குச் சென்று மக்கள் வாக்களித்திட ஏதுவாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

அதன்படி, வரும் 17 மற்றும் 18ஆம் தேதிகளில் சென்னையிலிருந்து வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன், சிறப்பு பேருந்துகளையும் சேர்த்து மொத்தம் 7 ஆயிரத்து 154 பேருந்துகள் இயக்கப்படவிருப்பதாக மாநில போக்குவரத்துத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு நாட்களில், பிற ஊர்களிலிருந்து 3 ஆயிரத்து 60 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

அமலாக்கத்துறை வழக்கிலிருந்து தம்மை விடுவிக்கக் கோரி, முன்னாள் அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி தொடர்ந்த வழக்கில் சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் நாளை மறுநாள் உத்தரவு பிறப்பிக்கவுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ், திரு. செந்தில்பாலாஜி, கடந்த ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் தேதி கைது செய்யப்பட்டார்.

>>>><<<<

மன்னார் வளைகுடா பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தென் தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் அடுத்த 24 நேரத்தில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 35 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

ஈரோடு மாவட்டம், அந்தியூர் அருகே கத்தரிமலை வன கிராமத்தில் 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி, வனத்துறை மற்றும் வருவாய்த்துறை சார்பில் நடனம், கூத்து மற்றும் விளையாட்டுப் போட்டிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

>>>><<<<

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் அருகே பையனூரில் செயல்படும் தனியார் சட்டக் கல்லூரி மாணவர்கள், கூவத்தூர் கிழக்கு கடற்கரை சாலை பேருந்து நிலையம் அருகே வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டதுடன், பொதுமக்களிடம் அதுபற்றி விரிவாக விளக்கிக் கூறினர்.

>>>><<<<

பெரம்பலூர் மக்களவைத் தொகுதி வாக்கு எண்ணும் மையமான தனியார் பள்ளி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து தேர்தல் பார்வையாளர் திரு. ராஜேந்திரகுமார் வர்மா, மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. கற்பகம் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

>>>><<<<

தஞ்சை பெரிய கோவில் சித்திரை திருவிழா தேரோட்டத்தை முன்னிட்டு, அம்மாவட்டத்திற்கு வரும் 20ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுவதாக ஆட்சியர் திரு. தீபக் ஜேக்கப் உத்தரவிட்டுள்ளார்.

>>>><<<<

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நடைபெறும் வரும் 23ஆம் தேதி அன்று அம்மாவட்டத்திற்கு விடுமுறை அறிவிக்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திருமதி. சங்கீதா தெரிவித்துள்ளார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்தி

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோகன்பஹான் அணி – மும்பை அணியை எதிர்த்து விளையாடுகிறது.

இப்போட்டி கொல்கத்தாவில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

>>>>END<<<<